அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 181

இல. 543 இ 665 டி
தாபனப் பகுதி,
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு – 7,
1980, ஒற்றோபர் மாதம் 31 ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவர்க்கும்.

நிருவாக அமைப்பு, நடவடிக்கைமுறைகள்
என்பன சார் சீர்திருத்தம்.

அரசாங்கத்தின் பணி நிகழ்ச்சிமுறைகள் விரைவாகவும் திறனுடனும் செயற்படுத்தப்பெற வேண்டுமாயின் பரந்தளவில் நிருவாகச் சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவ்சியம் குறித்து 1979.08.28ஆந் தேதியன்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் மாண்புமிகு பிரதம அமைச்சர் குறிப்பிட்டார். அதன் விளைவாக மாண்புமிகு வர்த்தக கப்பற் சேவை அமைச்சர், மாண்புமிகு அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல் அமைச்சர், மாண்புமிகு காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர், மாண்புமிகு கடற்றொழில் அமைச்சர் ஆகியோரால் நிருவாகத்திற் சீர்திருத்தங்களைச் செய்யும் பொருட்டான பல யோசனைகள் அடங்கிய விஞ்ஞாபனங்கள் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. இந்த நான்கு விஞ்ஞாபனங்களிலும் அடங்கியுள்ள முக்கிய விதப்புரைகளின் பொழிப்பைக் கொண்டதும், (திட்ட நடைமுறைப்படுத்தல் அமைச்சைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் தொகுப்பொன்றினாற் தயாரிக்கப்பட்டதுமான) 1979.12.10 ஆந் தேதியிடப் பெற்ற திரட்டிய அறிக்கையொன்றை அமைச்சரவை 1980.01.09 ஆந் தேதியன்று நடைபெற்ற அதன் கூட்டத்திற் பரிசீலித்தது.

02. குறித்த திரட்டிய அறிக்கையில் 03 ஆம் பந்தி முதல் 08 ஆம் பந்தி வரையுள்ள பந்திகளிற் சுருக்கிக் கூறப்பெற்றுள்ள யோசனைகளை ஏற்றுக் கொள்வதென அமைச்சரவை இக் கூட்டத்தில் முடிவு செய்ததுடன், அவற்றைச் செயற்படுத்துவது தொடர்பான விவரங்களை அபிவிருத்திச் செயலாளர்கள் குழு தயாரித்து, அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் வேண்டியது. அரசாங்க நிருவாக அமைச்சின் செயலாளரைத் தலைவர்/அவைகூட்டுநராகவும், பிரதம அமைச்சரின் செயலாளர், வர்த்தக, கப்பற் சேவை அமைச்சின் செயலாளர், கடற்றொழில் அமைச்சின் செயலாளர், திறைச்சேரிப் பிரதிச் செயலாளர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட உபகுழுவொன்று 1980.01.29 ஆந் தேதியன்று நடைபெற்ற அபிவிருத்திச் செயலாளர்கள் குழுவின் மாநாட்டில் அக்குழுவினால் நியமிக்கப்பட்டது.

03. அமைச்சரவை, 1980.07.30ஆந் தேதியன்று நடைபெற்ற அதன் கூட்டத்திற் குறித்த குழுவின் விதப்புரைகளுக்கு அங்கீகாரம் அளித்தது.

04. இல. 08 முதல் இல. 19 வரையான விதப்புரைகளை உங்கள் தகவலுக்காகவும், அவை குறித்து வேண்டிய நடவடிக்கையெடுக்கப்பெறுவதற்காகவும் ஒரு பின்னிணைப்பாக அனுப்புகின்றேன்.

ஒப்பமிட்டவர். டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.